1982 ஏப்ரல் 5]

மீண்டும் ஒரு குழு அமைக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டு வருகின்றன. கமிஷ்னரிடத்திலிருந்து தகவல் கிடைக்கப் பெற்றவுடன், புதியதாகக் குழு அமைக்கப்படும். அந்தக் குழுவின் பரிந்துரை வந்த பிறகு அது கட்டாயம் செயல்படுத்தப் படும்.

மத்திய அரசு இயற்ற உத்தேசித்திருக்கும் கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர் வரைவுச் சட்டம்

*வினா எண் 765—திரு என். எஸ்.வி. சித்தன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா.—

மத்திய அரசு இயற்ற உத்தேசித்திருக்கும் கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர் மத்திய வரைவுச் சட்டம் 1980—ன் பேரில் மாநில அரசு தெரிவித்துள்ள கருத்துக்கள் எவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஒரு விவர அறிக்கை *அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-40)

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15, 16 தேதிகளில் டெல்லியிலே நடைபெற்ற தொழிலாளர் நல அமைச்சர்கள் கூட்டத்திலே இந்தச் சட்டத்தைப் பெரிதும் வரவேற்று தமிழக அரசு தெரிவித்திருக்கின்ற கருத்துக்களிலே ஏறத்தாழ 5 கருத்துக்களைப் பற்றி இங்கே விவர அறிக்கை வைக்கப்பட்டிருக்கின்றது. இந்த 5 கருத்துக்களின் மீது மத்திய அரசு தெரிவித்திருக்கின்ற கருத்துக்கள் எவை? இவற்றை மத்திய அரசு ஏற்றுக் கொண்டதா? அதற்குப் பின்னர் அவர்கள் அளித்த பதில் பற்றிய விவரம் என்ன?

மாண்புகுமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதா, இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால் மத்திய அரசால் உருவாக்கப்பட்டிருக்கின்ற சட்டத்தில் நல்ல சிறப்பான அம்சங்கள் இருக்கின்றன. எனவே மத்திய அரசு தன்னுடைய சட்டத்தைக் கொண்டு வந்து அமல் படுத்தினால் அது எப்படி அமல்படுத்தப்படுகின்றது, எப்படி தொழிலாளர்களுக்குப் பலன் அளிக்கின்றது என்று பார்த்து அதிலே குறை இருந்தால் மாநில அரசு என்னென்ன திருத்தங்கள் செய்யவேண்டும் என்பதை மத்திய அரசிடம் மீண்டும் வலியுறுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*345-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS

திரு. என். எஸ். வி. சித்தன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இருக்கின்ற இந்தக் கட்டிடம் மற்றும் கட்டுமனத் தொழிலாளர்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் அரசிடம் இருக்கின்றதா? சில நாட்களுக்கு முன்பு தமிழக அரசே இந்த மாதிரி உடல் உழைப்புத் தொழிலாளர் பற்றிய சட்டம் கொண்டுவந்ததாக அறிகிறேன். அதிலே இந்தக் கருத்துக்கள் முழுமையான அளவுக்கு இடம் பெற்றிருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, மத்திய அரசு ஒரு சட்டம் நிறைவேற்றிக் கொண்டுவர இருக்கின்றது. இந்த அரசைப் பொறுத்தவரையிலே அதிலே நாங்களும் பரிந்துரை கொடுத்திருக்கிறோம். அதிலே எல்லா அம்சங்களும் இருக்கும் என்று கருதுகிறோம். ஆனால் துரதிஷ்டவசமாக மத்திய அரசு அந்தச் சட்டத்தைக் கொண்டு வராவிட்டால் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய சட்டத்தைத் தயார் செய்து இந்த அரசு வைத்துக் கொண்டிருக்கின்றது. எனவே மத்திய அரசு தவறினால் அல்லது அதிலே காலதாமதமானால் மாநில அரசே இதுபற்றிய சட்டத்தைக் கொண்டு வந்து இதே அவையிலே அறிமுகப்படுத்தி, நிறைவேற்றுவதற்கு எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மத்தியச் சட்டத்திலே இழப்பீட்டுத் தொகை அளிப்பதற்கு வசதி செய்து அதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கின்றதா? அதேபோன்று மாநில அரசு தயாரித்திருக்கின்ற சட்டத்திலேயும் இது உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொல்லும்போது மத்திய அரசு கொண்டுவந்திருக்கின்ற சட்டம் நன்றாக இருக்கின்றது என்று சொன்னேன். தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கின்றது. கட்டுமானப் பணியாளர்களுக்கு அவர்தம் நிறுவனத்தினர் ஈட்டுறுதி வசதி அளிக்கவும் விபத்துக்கள் நேரிடின் இழப்பீடு வழங்கவும் அந்தச் சட்டம் உறுதியளிக்கின்றது. எனவே தொழிலாளர்கள் சிறைக்குப்போகும் வரை போராடியபோது கூட இழப்பீடு தருவதற்கு மத்திய அரசு சட்டத்திலே இடம் இருக்கின்றது, எனவே அருள் கூர்ந்து அந்தச் சட்டம் வரும் வரை காத்திருங்கள், போராட்டதைத் நிறுத்துங்கள் என்று சொன்னேன். எனவே இழப்பீடு தர அச்சட்டத்திலே இடமிருக்கிறது.

ALONE TRIUMPHS